www.padippakam.com



# பண்டாரவன்னியனும் காக்கைவன்னியனும்

48

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தைப் போலவே, ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்தில் வன்னிப் பகுதியை ஆட்சி செய்த மன்னர்கள் அந்நியர்களுக்கு அடிபணியாது ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களில் முக்கியமானவன் பண்டாரவன்னியன்.

தமிழ் நாட்டு பாஞ்சாலங் குறிச்சியில் ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய வீரபாண்டிய கட்டப் பொம்மனைப் போல அடங்கா பற்று என அழைக்கப்பட்ட வன்னி மண்ணில், மாவீரன் பண்டார வன்னியன் விளங்கினான்.



பண்டார வன்னியனும் அவனது காதலி குருவிச்சி நாச்சியாரும்

குலசேகரம் வைரமுத்து என்ற இயற்பெயர் கொண்ட பண்டார வன்னியன் வடக்கே யாழ்ப்பாணம் பரவைக் கடலையும் தெற்கே அருவியாற்றையும் கிழக்கே திருகோணமலையையும், மேற்கே மன்னாரையும் எல்லைகளாகக் கொண்டு தனது ஆட்சிப் பரிபாலனத்தை நடத்தி வந்தான். அவனது சகோதரிகளான 'நல்லநாச்சியார்' திருமலை எல்லைப் புறத்திலும், 'ஊமச்சி நாச்சியார்' மன்னார் பனங்காமத்திலும் ஆட்சி செய்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு அரச பரம்பரையினர், தங்களது ஆட்சியுரிமையை போர்த்துக்கேயரிடம் பறி கொடுத்த பின் அதை மீட்பதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் தோல்வியில் முடிந்ததும், தங்களது எதிர்ப்பைக் கைவிட்டு, அந்நியர்களுக்கு அடிபணிந்து வாழப் பழகிக் கொண்டு ஒரு நூற்றாண்டு கடந்து விட்ட நிலையிலும் பண்டாரவன்னியன் தன் இறுதி மூச்சுள்ளவரை அந்நியர்கள் தனது மண்ணில் கால் பதிக்க விடாது போராடி வந்தான்.

பண்டாரவன்னியனின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில், கண்டி தவிர்ந்த இலங்கையின் பிற பகுதிகள் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்தன. ஒல்லாந்தர் காலத்திலேயே பண்டாரவன்னியனின் ஆட்சிப் பகுதியான அடங்காப்பற்றை கைப்பற்றுவதற்கு பல முயற்சிகளும் படையெடுப்புக்களும் நடைபெற்றன.

ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வந்து ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்ததும், வன்னியைக் கைப்பற்றி, பண்டாரவன்னியனையும் அவனது சகோதரிகளையும் அடிமைப் படுத்துவதற்கு பல தடவைகள் முயற்சி எடுக்கப்பட்டன. ஆனால் ஒவ்வொரு தடவையும் பண்டாரவன்னியனின் படைகள் ஆங்கிலேயர் படைகளை நிர்மூலமாக்கி தோல்வியுறச் செய்து வந்தன.




ஆங்கிலேயரின் வரலாற்றுக் குறிப்புகளின் படி கி.பி 1803ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி கப்டன் வொன்றி பேக் என்பவனின் தலமையில் முல்லைத்தீவுக்கு வந்திருந்த ஆங்கிலேயப் படையை பண்டாரவன்னியன் வெற்றிகரமாக தாக்கி அழித்து விட்டான். வொன்றி பேக்கும் அவனது மெய்க்காவலர்கள் சிலருமே இந்தப் போரில் உயிர் தப்பி திருகோணமலைக்கு ஓடிவிட்டனர்.

இந்தத் தோல்வியில் கிடைத்த பாடத்தின் அடிப்படையில் அடர்ந்த காட்டுப் பகுதியில் ஆட்சி நடத்தும் பண்டாரவன்னியனை சூழ்ச்சியின்றி வேறு வழிகளில் விழுத்த முடியாது, என்று ஆங்கிலேயர்கள் உணர்ந்து கொண்டனர். இதற்காக வன்னியப் பகுதியில் ஆட்சிபுரியும் வன்னியச் சிற்றரசர்கள் எவரையாவது தம் பக்கம் இழுக்க அவர்கள் தீர்மானித்தனர்.

வன்னியின் கரிக்கட்டு மூலை என்ற பிரதேசத்தை காக்கை வன்னியன் ஆட்சி செய்து வந்தான். பண்டார வன்னியனின் ஆட்சிப் பிரதேசத்தோடு ஒப்பிடுகையில் கரிக்கட்டு மூலை ஒரு சிறு பிரதேசம்தான். இயல்பாகவே காக்கைவன்னியருக்கு பண்டார வன்னியன் மேல் தீராத பகை இருந்தது. அதற்கு காரணம் பண்டார வன்னியன் காதலித்த குருவிச்சி நாச்சியாரை காக்கை வன்னியன் விரும்பியதுதான். இயல்பாகவே கோழைத்தனமும், நற்குணமுள்ள காக்கை வன்னியனை விட, நாட்டுப்பற்றும், வீரமும் விவேகமும் மிகுந்த பண்டார வன்னியனையே குருவிச்சி நாச்சியார் விரும்பியிருந்தார்.

இதனால் ஆத்திரமும் அவமானமும் அடைந்த காக்கை வன்னியன் முதலில் ஒல்லாந்தருடன் சேர்ந்து கொண்டு பண்டார வன்னியனை அழிக்க முயற்சி செய்தான். அது கைகூடாத நிலையில் ஒல்லாந்தர் நாட்டை விட்டுப் போனதும், ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டான்.

ஆங்கிலேயருக்கு காக்கை வன்னியனைப் போன்ற ஒரு ஆளே தேவைப்பட்டது. அவர்கள் அவனுக்கு வேண்டிய உதவிகள் செய்து அவனது அரண்மனையில் தமது படைகளையும் நிறுத்தி வைத்தனர்.

கி.பி 1803-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காக்கை வன்னியன் கொடுத்த தகவலின் பேரில் திருகோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் என்பவனின் தலைமையில் ஓர் பெரிய ஆங்கிலப் படை புறப்பட்டு வந்து முல்லைத் தீவைக் கைப்பற்றியது. இந்தச் சண்டை நடைபெற்ற நேரத்தில் பண்டாரவன்னியன் அவனது நண்பனான கண்ணுசாமி என்கிற விக்கிரம ராஜசிங்கனை சந்திக்கச் சென்றிருந்தான். கண்ணுசாமியும், பண்டாரவன்னியனும் நெருங்கிய நண்பர்கள் என்பதையும், பண்டாரவன்னியன் கண்ணுசாமியை சந்திக்க கண்டிக்கு சென்ற தகவலையும் காக்கை வன்னியனே ஆங்கிலேயருக்கு கொடுத்ததாக நம்பப்படுகிறது.

முல்லைத்தீவைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயப் படை, பண்டாரவன்னியனின் பிரதிநிதிகளாக அங்கு தங்கியிருந்த குலசேகரம் முதலியாரையும் அவரது நண்பர்களையும் பிடித்துத் தூக்கிவிட்டது. அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் இன்னும் தூக்குமரத்தடி என்று அழைக்கப்படுகின்றது.

முல்லைத்தீவுப் படையெடுப்பு நடைபெற்ற நேரத்திலேயே யாழ்ப்பாணத்திலிருந்து ஜோன் யுவேபின் என்பவனின் தலைமையில் 19வது படையணியைச் சேர்ந்த படை வன்னிக்குச் சென்று கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி வீடுகள் கட்டிடங்களை சூறையாடித் தீமூட்டியது.

விபரமறிந்த பண்டாரவன்னியன் 1803-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி கண்டியிலிருந்து வன்னிக்குத் திரும்பிய போது அதிகாலை 5.00 மணியளவில் கற்சிலை மடுவில் வைத்து, எதிர்பாராத விதமாக வொன்றிபேக் என்பவனின் தலைமையில் வந்த படைகளால் சுற்றி வளைக்கப்பட்டான். இந்தச் சண்டையில் பண்டாரவன்னியனின் முக்கிய சகாக்கள் சிலர் பலியாகிய போதிலும் அவன் தந்திரமாகத் தப்பிச் சென்று விட்டான். கண்டி மன்னன் விக்கிரம ராஜசிங்கனிடமிருந்து பெற்று வந்த கண்டி அரசின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஆங்கிலேயரால் பறிக்கப்பட்டது.

பண்டாரவன்னியனுக்கு எதிராக ஆங்கிலேயர் அடைந்த வெற்றியைக் குறிக்கும் ஆங்கிலக் கல்வெட்டொன்று கற்சிலை மடுவில் இன்றும் உள்ளது. அதில்
``HERE BOUTS CAPTAIN VON DRIBEREG
DEFEATED PANDARA VANNIYAN 31st
OCTOBER 1803" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவன்னியனுக்கு எதிராக ஆங்கிலேயர் அடைந்த வெற்றியைக் குறிக்கும் ஆங்கிலக் கல்வெட்டில்
``HEREBOUTS CAPTAIN VONDRIBEREG DEFEATED PANDARA VANNIYAN 31st OCTOBER 1803" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

- நக்கீரன்

படிப்பகம்